முருகப்பெருமான் துணை

**மகான் பூதத்தாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. வள்ளலே வாழும் ஞானியே
   வரம்பல தருகின்ற தவசியே
   இல்லாமை போக்கி மீட்க
   எல்லாமாய் காக்க வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சுபகிருது சேல் திங்கள்
   வரங்களென மூவாறோர் திகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19 ம் நாள், 02.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை பூதத்தாழ்வார் யானும்
   அருளுவேன் உலகநலம்பெற
   பசிபிணி விரட்டும் சன்மார்க்க
   பரிபக்குவமான நெறிமுறைகள் தன்னை
4. தன்னையே உலகமக்கள் ஏற்று
   தரணியோர் தொடர்ந்து வருக
   அண்ணலே என அரங்கமகானிடம்
   அனுகி தீட்சை ஏற்று வர
5. வருகவே மக்களிடை தெளிவு
   வரமென ஞானபலம் கூடி
   முருகப்பெருமான் வழிபாடாகி
   முழுமைதரும் ஞானமாக நிறைந்து
6. நிறைந்துமே உலகைமாற்றவல்ல
   நீதிமான்களாக தருமவான்களாக
   குறைவிலா உலகமெல்லாம் நிரம்பி
   கூறிடுவேன் அற்புதம் நடக்கும்
7. நடக்கவே அரங்கன் அவதார
   நல் நோக்கம் நிறை வேறும்படி
   தடையற உலகமெங்கும் மாற்றம்
   தவராஜன் தொண்டர்களை கொண்டு

8. கொண்டுமே மக்களை காக்கின்ற
குறைவிலா ஞான ஆட்சியாக
தொண்டர்கள் நிரம்பிய நல்
தொண்டுமிகுந்த ஞான பூமியாக
9. ஆகவே ஞானிகள் பலமுடன்
ஆற்றல் மிக்க சக்திகள்
மிகைபட எங்கும் நிரம்பியே
மேலவர்கள் மெச்சும் வண்ணம்
10.வண்ணமுடன் இயற்கை பலமும்
வளமும் பாதுகாப்பும் நிறைந்த
அண்ணல் தலைமை கொண்ட
ஆறுமுகனார் வழி நடத்திட
11. நடத்திட ஞானசித்தர் காலமாக
ஞானிகளாக எண்ணிக்கை யதும்
தடையற எங்கும் பெருகி மாற்றம்
தவராஜன் மூலம் நடந்தேறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–